**O.S.157/2021**

Date : 16.03.2026.

வா.சா.3 : தேவஇரக்கம்

<u>வா.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

தாவா கிராமத்தில் எவ்வளவு காலமாக குடியிருந்து வருகிறேன் என்றால் நான் பிறந்ததிலிருந்தே அங்கு தான் குடியிருந்து வருகிறேன். 67 வயது தாண்டியுள்ளது எனக்கு. பிரதிவாதிகள் எனக்கு தெரிய 67 வருடங்கள் குடியிருப்பார்கள். வழக்கு தாக்கல் செய்துள்ள சாமுவேல் எந்த சர்வே எண்ணை தாக்கல் செய்துள்ளார் என்றால் 383/6 ஆகும். என்னிடம் காட்டப்படும் வாதி சான்றாவணம் 14, 06.03.2008 தேதியிட்ட பவர் சர்வே எண்.383/1 க்கு பெறப்பட்டது என்றால் சரியல்ல. 383/6 ஆகும். இந்த பவர் பத்திரத்தை தவிர, ஜார்ஜ்யிடம் வேறு பவர் பத்திரம் வாங்கியுள்ளேனா என்றால் நிறைய வாங்கியுள்ளேன். அந்த பவர் பத்திரத்தை அனுசரித்து 28.06.2008 ல் வா.சா.ஆ.15 கிரைய ஆவணத்தை நிறைய பேருக்கு எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் பாலகிருஷ்ணனுக்கு எழுதிக் கொடுத்துள்ளேன். 28.06.2008 கிரைய பத்திரத்தை 28.01.2009 ல் ரத்து செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பத்திரம்தான் நான் எழுதிக் கொடுத்த ரத்து பத்திரம் என்றால் எனக்கு படிக்க தெரியாது. தாவா சொத்தில் தற்போது வீடு உள்ளதா என்றால் நான் வாங்கும் போது வீடு இல்லை, தற்போது கட்டியுள்ளார்கள். மேற்படி வீட்டை கட்டியது யார் என்றால் பாக்கியராஜ் மகன் வீடு கட்டியுள்ளார். எனக்கு தெரிந்து வீடு கட்டப்பட்டு 1 வருடம் ஆகாது. தாவா சொத்தில் ஒரு கம்பெனி உள்ளது என்றால் சரிதான். அந்த கம்பெனி யார் கட்டினார்கள் என்றால் பாக்கியராஜ் மகன் கட்டியுள்ளான். தாவா சொத்தில் உள்ள கம்பெனி எனக்கு தெரிந்து எத்தனை வருடங்கள் உள்ளது என்றால் 6, 7 வருடங்கள் இருக்கும். தாவா சொத்திற்கு வாதி சாமுவேலுக்கு கிரைய பத்திரம் இல்லை என்றால் அவருடைய அப்பா சொத்து ஆகும். 1ம் பிரதிவாதி பாக்கியராஜ் தந்தை தங்கசாமி நாடாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். தங்கசாமி நாடார் பெயரில் தாவா சொத்திற்கு 19.12.1979 தேதியிட்ட கிரைய ஆவணம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நான்கு பக்க எல்கை எனக்கு தெரியுமா என்றால் வடபுறம் ஜார்ஜ் நாடார் சொத்து. தென்புறம் சாமுவேல் நாடார் சொத்து. கீழ்புறம் குளம். மேற்கு உரிமையாளர் பெயர் தெரியவில்லை. 383/6 ல் சாமுவேலுக்கு வேறு சொத்து உள்ளதா என்றால் 2 ஏக்கர் இடம் உள்ளது.

28.06.2008 ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை 28.01.2009 ல் ரத்து செய்ய வேண்டிய அவசியம் என்னவென்றால் சாமுவேல் நாடார் மேற்படி இடத்தை வேண்டும் என்று கூறியதால் கிரையத்தை ரத்து செய்துவிட்டேன். அந்த கிரைய ரத்து பத்திரத்தில் நான் மட்டும்தான் கையெழுத்து செய்தேன் என்றால் பாலகிருஷ்ணன் கையெழுத்து செய்துள்ளார். தாவா சொத்தானது 1ம் பிரதிவாதியின் தந்தை தங்கசாமி நாடாருக்கு 1979 முதல் பாத்தியப்பட்டு, அவர்தான் அனுபவம் செய்து வந்தார் என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல. தங்கசாமிநாடார் இறந்த பிறகு தாவா சொத்தை பிரதிவாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.